**செய்தி வெளியீடு எண்: 041** **நாள்: 16.01.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று **(16.1.2019)** சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை

---

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைக்கு மகிழ்ச்சியான நாள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சான்றோர்கள் சென்னதைப் போல தை பிறந்திருக்கின்றது, நமக்கு வழி பிறந்திருக்கின்றது. அத்தனை ஏழை குடும்பத்திலும் இந்த ஆண்டு பொங்கல் நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்ற பொங்கல் இந்த தை பொங்கல். அத்தனை குடும்பங்களிலும் பொங்கல் பொங்கி, மகிழ்ச்சி பொங்க இந்த நன்னாளில் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மணிமண்டபம், அந்த மணிமண்டபத்திலே பொன்மனச் செம்மல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய வெண்கல முழு உருவச்சிலையையும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய வெண்கல முழு உருவச்சிலையையும் திறந்து வைத்து உங்களைப் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால், நான் முதன்முதலில் **1989**–ல் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். அப்பொழுது மகுடஞ்சாவடி ஒன்றியம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. அந்த காலகட்டத்தில், மகுடஞ்சாவடியில் இருக்கின்ற வாக்காளர்கள் அதிக அளவில் வாக்களித்ததன் காரணத்தினால், அன்றைக்கு வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆகவே, இந்த மண்ணை எப்போதும் மறக்காமல், இந்த மண்ணிலே நிலைத்து நிற்கின்ற அளவிற்கு எனக்கு மிகப் பெரிய இடத்தை அளித்த ஒன்றியம் மகுடஞ்சாவடி ஒன்றியம். அன்றைக்கு நீங்கள் கொடுத்த அங்கீகாரம், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்றேன். இந்த சேலம்–

கோவை தேசிய நெடுஞ்சாலையில் மகுடஞ்சாவடியிலும், அரியானூரிலும் அடிக்கடி விபத்து ஏற்படுகின்ற பகுதி. மகுடஞ்சாவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உறுப்பினர் திரு ராஜா அவர்களும், அரியானூருக்குட்பட்ட வீரபாண்டி சட்டமன்ற தொகுதி சகோதரி மனோன்மணி அவர்களும் வைத்த கோரிக்கையை ஏற்று, அரியானூர், மகுடஞ்சாவடி இரண்டிலும் உயர்மட்டப் பாலம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியிலே வரவேற்புரையாற்றிய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.சுந்தரம் அவர்களே, திரு.பன்னீர்செல்வம் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி.மனோன்மணி அவர்களே, முன்னாள் அமைச்சர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம் அவர்களே, திரு.சக்திவேல் அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு.சின்னத்தம்பி அவர்களே, திருமதி சித்ரா அவர்களே, முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவினுடைய தலைவர் சகோதரர் ஆர்.இளங்கோவன் அவர்களே, நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற அரசு உயரதிகாரிகளே, நமக்கு சிறப்பு சேர்த்த சமூக நலத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் வி.சரோஜா அவர்களே, இங்கே குழுமியிருக்கின்ற கழகத்தினுடைய நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விசைத்தறி தொழிலாளர்களே, பொதுமக்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் சட்டப்பேரவை உறுப்பினர் வைத்த கோரிக்கையெல்லாம் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை

வைத்திருக்கின்றார்கள். அதையெல்லாம் பரிசீலித்து படிப்படியாக இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை கோட்டத்தின் சார்பில், மத்தியசாலை நிதி திட்டத்தின் கீழ் சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடி–குமாரபாளையம்–எடப்பாடி சாலை சந்திப்பில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு–அரியானூர் சாலை சந்திப்பில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய மேம்பாலங்கள் கட்டுகின்ற பணிகளுக்கும்,

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேட்டூர், எடப்பாடி மற்றும் ஆத்தூர் ஆகிய மூன்று நகராட்சிகளில் ரூபாய் 8 கோடியே 96 இலட்சம் மதிப்பீட்டில், குப்பை கிடங்குகளில் தேங்கியுள்ள குப்பைகளை உயிரி அகழ்வு (Bio-Mining) முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணிகளுக்கும்,

நெடுஞ்சாலைத்துறையின் நபார்டு மற்றும் கிராம சாலைகளின் சார்பில் நபார்டு ஆர்.ஐ.டி.எப் நிதித் திட்டத்தின் கீழ் எடப்பாடி – மகுடஞ்சாவடி சாலையில், கவுண்டனேரி பகுதியில் ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணிக்கும்,

வருவாய்த்துறையின் சார்பில் சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2 கோடியே 53 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கும்,

சேலம் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் ரூபாய் 23 இலட்சத்து 82 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணிக்கும்,

சூரமங்கலம் மற்றும் தலைவாசல் ஆகிய பகுதிகளில் ரூபாய் 29 இலட்சத்து 73 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய இரண்டு குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டிடம் கட்டும் பணிகளுக்கும்,

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் துட்டம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, நங்கவள்ளி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சித்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, வைகுந்தம் அரசு மேல்நிலைப்பள்ளி, சின்னப்பிள்ளையூர் அரசு உயர்நிலைப்பள்ளி, சின்னமநாயக்கன் பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 7 பள்ளிகளில் ரூபாய் 10 கோடியே 79 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பள்ளி கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், மாணவ, மாணவியர் கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுக்கும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் சார்பில் சங்ககிரி அரசு தாலுக்கா மருத்துவமனையில் ரூபாய் 3 கோடியே 15 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பீட்டில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணிக்கும்,

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் மகுடஞ்சாவடியில் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடம் கட்டும் பணிக்கும்,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் சார்பில் சேலம் பெண்கள் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரவியல் குளிர்பதனம் மற்றும் குளிரூட்டல் தொழில் பயிலரங்கம், வகுப்பறை மற்றும் கழிவறை கட்டிடங்கள் கட்டும் பணிக்கும்,

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சேலம் கோட்டத்தின் சார்பில் நகர்ப்புற சுற்றுச்சூழல் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 47 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் 33 புதிய மழைநீர் வடிகால் தொட்டி, தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கும்,

என மொத்தம் ரூ.121 கோடியே 55 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் 53 புதிய திட்டப்பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் (16.01.2019) மகுடஞ்சாவடியில் நடைபெறுகின்ற இவ்விழாவில் திறந்து வைக்கப்படும் முடிவுற்ற திட்ட பணிகள்

நெடுஞ்சாலைத்துறையின் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்தின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் எடப்பாடி – பூலாம்பட்டி – மேட்டூர் சாலையில் ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மேம்பாலமும்,

வருவாய்த்துறையின் சார்பில் சங்ககிரியில் ரூபாய் 15 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புடன் கூடிய குறுநில வட்ட அளவையர் அலுவலக கட்டிடமும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 40 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பயணியர் நிழற்கூடம், மின்மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ்துளை கிணறு, கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட பணிகளும்,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூபாய் 8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் நீர்முள்ளிக்குட்டை ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக்கட்டிடமும்,

வனத்துறையின் சார்பில் ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்ட வன அலுவலக இணைப்பு கட்டிடம், சிறுவன மகசூல் பொருட்கள் விற்பனை வசதி மையம் மற்றும் சமுதாயக் கூடம் கூடுதல் கட்டிடமும்,

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் கண்ணியாம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி, சக்கரச்செட்டிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் டி.கோனகாப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் ரூபாய் 4 கோடியே 10 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், அறிவியல் ஆய்வகம், நூலகம் மற்றும் கழிப்பறைகளும்,

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 58 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்காடு கால்நடை மருத்துவமனை புதிய கட்டிடமும்,

அயோத்தியாபட்டணம், சீலநாயக்கன்பட்டி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி, கச்சுப்பள்ளி மற்றும் பைத்தூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 1 கோடியே 62 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தக கட்டிடங்களும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் மாநில பராமரிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 24 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்கநாடு துணை சுகாதார நிலைய புதிய கட்டிடமும்,

கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் தளவாய்ப்பட்டி ஒருங்கிணைந்த கலை பண்பாட்டு மையத்திற்கு புதிதாக கட்டப்பட்டுள்ள குடில்கள், வாகன நிறுத்துமிடம், சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை கட்டிடங்களும்,

என மொத்தம் ரூபாய் 8 கோடியே 94 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 21 புதிய பணிகள் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் சேலம் மாநகரில் சேலம் மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகில் கந்தம்பட்டி பிரிவில் ரூ.33.00 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் ஆத்தூர் அம்மம்பாளையம்–நரிக்குறவர் காலனி சாலையில் கி.மீ. 0/6–ல் புழுதிக்குட்டை வசிஷ்ட நதியின் குறுக்கே ரூபாய் 5.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் திரும்ப கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் புழுதிக்குட்டை–சந்துமலை சாலையில் கி.மீ. 5/10–ல் புங்கமடுவு அருகில் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ் அயோத்தியாபட்டினம்–பேளூர்–கிழாக்காடு சாலையில் கி.மீ. 32/6–ல் தும்பல் அருகில் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

என மொத்தம் 4 உயர்மட்டப் பாலப் பணிகளுக்காக ரூபாய் 45.50 கோடி மதிப்பிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு விரைவாக இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாநகரப் பகுதிக்கு அருகிலே, சேலம் மாநகரில் பஸ் போர்ட் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, இன்றைக்கு விரைவாக திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே, முதன் முதலாக பஸ் போர்ட் நம்முடைய பகுதியில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்து வசதிகள் பல்வேறு இடங்களில் வேண்டும் என்று நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நான் வருவதற்கு முன்பே, அங்கே சிலை திறப்பு விழா, மணிமண்டபம் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அந்த பேருந்து நிலையத்தை திறந்து வைத்திருக்கின்றேன் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏற்காடுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் சென்றுவருவதற்கு வசதியாக, ஒரு சிற்றுந்து அந்த நிகழ்ச்சியின் வாயிலாக விடப்பட்டிருக்கின்றது.

குண்டூருக்கு ஏற்காட்டிலிருந்து, ஒரு சிற்றுந்து வசதி துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. கருமந்துரை பகுதியில் குண்டூருக்கு வாழப்பாடியிலிருந்து ஒரு சிற்றுந்தும் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

விவசாய பெருமக்கள் மற்றும் வியாபாரிகளின் வசதிக்காக ஆத்தூரிலிருந்து கோவை செல்லும் பேருந்தை நீட்டிப்பு செய்து இயக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மு.க.ஸ்டாலின் அவரது கட்சியின் சார்பாக தமிழ்நாட்டில் கிராமம், கிராமமாகச் சென்று மக்களை சந்திப்பதாக ஒரு அறிக்கை வெளியிட்டு, அந்த பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா காலத்திலும் சரி, கிராமம், கிராமமாகச்

சென்று, மக்களை சந்தித்து, குறைகள் நீக்கப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் எம்.எல்.ஏ ஆக இருக்கிறபொழுது மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எல்லா கிராமங்களுக்கும் சென்றிருக்கிறேன். சேலம் மாவட்டத்திலுள்ள அத்தனை கிராமங்களுக்கும், பேரூராட்சி பகுதிக்கும், நகராட்சிப் பகுதிக்கும், மாநகராட்சி பகுதிக்கும் நாங்களெல்லாம் சென்று வந்திருக்கிறோம். அப்பொழுது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவை சுமார் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்தத் திட்டம் போய் சேரவேண்டும் என்று அறிவித்து, எல்லா பகுதிக்கும் நானே நேரடியாகச் சென்று அந்தத் திட்டத்தை துவக்கி வைத்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்களெல்லாம் ஏற்கனவே கிராமம், கிராமமாகச் சென்று,மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையை ஏற்று, அந்த கிராம மக்களுக்கு என்னென்ன தேவை என்பதையறிந்து, அதை உடனுக்குடன் அம்மாவிடத்திலே தெரிவித்து, அவர்களுடைய குறையை நிறைவேற்றியிருக்கின்றோம். அம்மாவின் மறைவிற்குப் பிறகும், அதையே தொடர்ந்து இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அனைத்து மக்களுடைய அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் கிராமம், கிராமமாக போனாலும் சரி, நடைபயணம் மேற்கொண்டாலும் சரி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏராளமான திட்டங்களை மக்களுக்கு தந்திருக்கின்றது. அவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார். கிராமப்புற, நகரப்புற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பு உள்ளாட்சி அமைச்சரிடத்தில் இருந்தது. அப்பொழுது, எத்தனை கிராமத்திற்கு நீங்கள் சென்றீர்கள்? எத்தனை மக்களை பார்த்தீர்கள்? எத்தனை மக்களுக்கு என்னென்ன திட்டங்களை கொடுத்தீர்கள்? எதையும் செய்யவில்லை, இதெல்லாம் போலி விளம்பரம். இவர் ஆட்சியில், பதவியில்

இருந்தபொழுது, எனக்குத் தெரிந்த அளவில் இவர் கிராமத்திற்கு சென்றதுபோல் தெரியவில்லை. மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எத்தனை கிராமங்களுக்கு வந்திருக்கிறார் ? ஆளுங்கட்சியாக இருக்கும்பொழுதே மக்களை பார்க்கவில்லை, இப்பொழுது எதிர்க்கட்சியாகி மூன்று வருடங்கள் ஆகிறது, எங்கு போய் மக்களை பார்த்தீர்கள் ? இப்பொழுது நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்காக, இவர்கள் கிராம சபை கூட்டம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுகின்ற நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களை எந்த அரசியல் தலைவராலும் ஏமாற்ற முடியாது என்பதை தெளிவாக சொல்லிக் கொள்கிறேன். மக்களுக்கு யார் நன்மை செய்வார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் கட்சியை துவக்கியதற்கு காரணமே கிராமத்திலே இருந்து நகரம் வரை ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து திட்டங்களும் சேரவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். மக்களுக்கு நாங்கள் தொடர்ந்து சேவை செய்து கொண்டிருக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் ஏராளமான திட்டங்களை வாரி வழங்கியிருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் செய்த சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இந்த ஆட்சியில் எதுவும் கிடைக்கவில்லை என்று தவறான குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு பதிலளிக்கின்ற வகையில் இன்றைக்கு அம்மாவினுடைய அரசும், அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலங்களிலும் சேலம் மாவட்டத்தில் மட்டும் செய்த சாதனைகளை குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தினையில் உதித்த திருமண உதவித் திட்டம் என்பது, ஏழை, எளிய பெண்களுக்கு உரிய நேரத்தில் திருமணம் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான். திருமண உதவித் திட்டத்தின் கீழ் 44,975 ஏழை பெண்களுக்கு இதுவரை 205.50 கிலோ தங்கம் கொடுத்திருக்கிறோம்.

திருமணத்திற்கு ஆகின்ற செலவிற்கு, அம்மாவினுடைய அரசு ரூபாய் 159 கோடியே 93 இலட்சம் திருமண உதவியாக கொடுத்திருக்கிறது.

விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை அனைத்து தகுதியான குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

12 ஆம் வகுப்பு பயின்ற 1 இலட்சத்து 78 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு 273.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினி வழங்கியிருக்கிறோம். இதுவரையில் அம்மா அவர்கள் 37 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினியை கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக அம்மாவினுடைய அரசு 15 இலட்சம் பேருக்கு கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்பட இருக்கிறது. மொத்தம் 52 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி கொடுப்பதன் மூலமாக, உலகத்தரமான கல்வி நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு கிடைக்கிறது.

கிராமத்திலே இருக்கின்ற விவசாய தொழிலாளி பெண்களுக்கு ஆடுகள் கொடுக்கின்றோம். நம்முடைய மாவட்டத்தில் மட்டும் 42 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் கொடுத்திருக்கின்றோம்.

சேலம் மாவட்டத்தில் மட்டும் 1874 கோடி ரூபாயை 73,896 மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கொடுத்திருக்கிறோம்.

பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் நம்முடைய மாவட்டத்தில் மட்டும், சுமார் 16,000 பயனாளிகளுக்கு 270 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம். அதேபோல 1490 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். பாரதப் பிரதமர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ் 11,940 நபர்களுக்கு 203 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

81233 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக 408.72 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

4 இலட்சத்து 11 ஆயிரத்து 110 விவசாயிகளுக்கு சுமார் 1998 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

3793 மாற்றுத் திறனாளிகளுக்கு 14.42 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் மூலமாக அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா பரிசு பெட்டகம், பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் வங்கி, அம்மா உணவகம், மெக்கா புனித யாத்திரைக்கு 1000 கோடி ரூபாய் மானியம், இப்படி நிறைய திட்டங்களை அம்மாவினுடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்த சில பகுதிகளும் இன்று கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கும் நிலையான, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கொடுக்கப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரபாண்டி பகுதியில் உள்ள மக்களுக்கும் குடிநீர் பிரச்சினை தீர்க்கும் வகையில், நிலையான, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கொடுக்கப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காப்பீட்டுத் திட்டம் 2 லட்சம் ரூபாயிலிருந்து 5 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க அறிவித்த அரசு அம்மாவினுடைய அரசு.

மருத்துவத் துறையிலே எண்ணற்ற சாதனைகளை படைத்திருக்கிறது. இரண்டு கையும் இல்லாத ஒருவருக்கு இறந்தவரது கைகளை எடுத்து பொறுத்தி, அரசு மருத்துவமனை ஒரு சாதனை படைத்திருக்கிறது.

கால்நடைகள் வளர்ப்பு சிறப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே கால்நடை மருந்தகங்களை அம்மா அரசு செய்து கொடுத்திருக்கிறது. தலைவாசல் கூட்டுரோடு பகுதியில் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு, ஒரு கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய தாய்மார்கள் கோழி வளர்க்க வேண்டும் என்பதற்காக கோழி கொடுக்கும் திட்டத்தையும் நான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, இன்றைக்கு அம்மாவின் அரசுதான் சாதனைகளை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சேலத்திலிருந்து சிங்கப்புள்ளி வரை உள்ள நான்கு வழிச்சாலை, எட்டு வழிச்சாலையாக அகலப்படுத்தப்படும். இதற்காக, ஒரு கிலோமீட்டருக்கு 18 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்க இருக்கின்றது. இந்த விரிவாக்கத்திற்காக, 1931 கோடி ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளிய மக்களுடைய அரசு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு.

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம், வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான, பொய்யான செய்தியை இன்றைக்கு பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனையையும், உங்களுடைய மகத்தான ஒத்துழைப்போடு தவிடுபொடியாக்கப்படும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்து, இந்த தை பொங்கல் நாளிலே அனைவரும் பொங்கல் வைத்து, இந்த தைத்

திருநாளை சிறப்பாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து, அம்மாவின் அரசு என்றைக்கு உங்களுக்கு துணை நிற்கும், உங்களுக்காக சேவை செய்கின்ற அம்மாவின் அரசு என்பதை சுட்டிக்காட்டி, இந்த மகுடஞ்சாவடி ஒன்றியம் அம்மாவினுடைய கோட்டை, அது எப்பொழுதும் அம்மாவினுடைய அரசிற்கு துணை நிற்கும், எங்களுக்கும் துணை நிற்கும். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய இந்த ஒன்றியத்தில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**